[10th February 1959

The Ashok Mehta Foodgrains Enquiry Committee

* 166 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Ashok Mehta Foodgrains Enquiry Committee has recommended in its report the building up of buffer stocks by internal purchases and imports to check the rise in the prices of foodgrains; and

(*b*) if so, the steps taken by the Government on the above recommendations of the Committee?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government of India are builidng up a Central reserve by making internal procurement and by import. This Government have also decided to procure 2 lakhs of tons of rice from the ensuing harvest this year.

Sri N. K. PALANISAMI : "பப்பர் ஸ்டாக்" வைத்துக் கொள்வதன் நோக்கம், பொருளின் விலை உயரக்கூடிய காலத்தில் அதை ஓரளவு குறையச் செய்வதற்கு இந்த ஸ்டாக் உதவும் என்பதுதான். அந்த அடிப்படையில் பார்த்தால், விலை உயர்வு காலத்தில் மாநிலத்தில் எல்லா இடங்களிலும் நியாய விலைக் கடைகளை வைத்து மக்களுக்கு உணவு தானியங்களை நியாய விலையில் கிடைக்கச் செய்யவேண்டும். சர்க்காரிடம் அப்படிப்பட்ட திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாக நான் முன்பே சொன்னேன் ; முதலில் அரிசியைக் கொள்முதல் செய்ய வேண்டும் ; அப்படி இல்லாவிட்டால் நெல்லை வாங்கி அதை அரிசியாக்க வேண்டும் ; அதற்குப் பிறகு, அவசியமான அளவிற்கு நியாய விலைக் கடைகளை அமைக்கவேண்டும்.

Sri M. KALYANASUNDARAM : இந்த நாட்டில் இறக்குமதி செய்யப்படும் தானியத்திலிருந்து எவ்வளவு தானியம் நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இறக்குமதி செய்யப்படும் தானியத்திலிருந்து நமது ராஜ்யத்திற்குப் பங்கு தேவையில்லை. நமது ராஜ்யத்திற்குப் போதுமான உணவு தானியம் இந்த ராஜ்யத்திலேயே உற்பத்தியாகிறது. ஆனால், சென்னைக்கு ஆந்திராவிலிருந்து மட்டும் முக்கியமாக நெல்லூர் அரிசி வந்து கொண்டிருக்கிறது. இந்த மாதம் முதல் தேதியிலிருந்து அது கொஞ்சம் நின்றிருக்கிறது. ஏதோ, கொஞ்சம் அதிக விலை கிடைக்குமா என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நிலைமையும் விரைவில் மாறிவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

Mr. SPEAKER : Questions 167 and 197 may be taken up together as they relate to the same subject.

Cost of living

* 167 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the steps recommended by this Government to the Central Government to bring down the cost of living; and

(*b*) the steps this Government took to bring down the prices?